# இதை என் நினைவாய்ச் செய்ய மாட்டாயா- என்

இதை என் நினைவாய்ச் செய்ய மாட்டாயா- என்
உடலை உண்டு உயர மாட்டாயா - ( 2 )
குருதி அருந்தித் திருந்த மாட்டாயா - என்
குருதி அருந்தித் திருந்த மாட்டாயா - நீ
என்னைப்போல வாழமாட்டாயா - ( 2 )

**1**
கன்னத்தில் அறைந்தால்
கன்னத்தைக் காட்டச் சொன்னேன்
தீமை செய்தால்
நன்மை செய்யச் சொன்னேன் - ( 2 )
இதற்கு மேல் நான்
என்ன கேட்கின்றேன் - ( 2 )
வெறும் வார்த்தையல்ல
வாழ்ந்து காட்டிவிட்டேன் - ( 2 )

**2**
பணிவிடை பெற அன்று
பணியைச் செய்யச் சொன்னேன்
தாழ்ச்சி கொண்டால்
உயர்வு உறுதியென்றேன் - ( 2 )
இதற்கு மேல் நான் என்ன கேட்கின்றேன்- ( 2 )
உன்னை வாழச் செய்ய
வாழ்ந்தும் காட்டிவிட்டேன் - ( 2 )